# வீணாகும் நேரம்

K.S.H. அபூ அப்துர் ரஹ்மான், துவாகுடிமலை, திருச்சி.

**'நேரம்'** நமக்குக் கிடைத்த மிகப்பெரிய செல்வமாகும். செல்வம் என்றாலே அதற்கு விலை மதிப்பும் உண்டு. ஆனால் எல்லாவற்றையும் விட விலை மதிப்புப் பெற்ற செல்வம் ஒன்று உண்டென்றால், அது நமக்குக் கிடைத்த நேரம் தான். ஏனெனில் பிற செல்வங்களைப் பெறுவதற்காக, அதற்கான எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள மிக, மிக முக்கியமாகத் தேவைப்படுவது நேரம்தான். நேரமின்றி எதுவும் செய்ய முடியாது.

**'காலம் பொன் போன்றது'** என்று கூறுபவர்களை நாம் மன்னித்து விடுவோம். பாவம்! அவர்கள் அறியாமையால் அப்படிக் கூறுகிறார்கள். பொருளைக் கொடுத்து பொன்னை வாங்கலாம், மண்ணை வாங்கலாம், ஏன்? பெண்ணையும் வாங்கலாம். ஆனால் கடந்து சென்ற ஒரே ஒரு வினாடியைக் கூட, கோடான கோடி கொட்டிக் கொடுத்தாலும் வாங்க முடியுமா? நிச்சயம் முடியாது.

இப்பொழுது சொல்லுங்கள் காலம் பொன் போன்றதா? காலமும் நேரமும் ஈடு இணையில்லாத, ஒப்பில்லாத ஒன்று; அதற்குக் காரணம் அல்லாஹ் கூறுகிறான் : **"நானே காலமாக இருக்கிறேன்".**

> **"ஆதத்தின் மகன் தனக்குத்தானே தீங்கி ழைத்துக் கொள்கிறான். அவன் காலத்தை நிந்திக்கிறான். நான் தான் காலமாக இருக்கிறேன்; என்னுடை கைகளில் தான் எல்லா விவகாரங்களின் அதிகாரமும் இருக்கிறது. நான் தான் இரவு பகலின் சுழற்சிகளையும் ஏற்படுத்துகிறேன்"** என்று இறைவன் கூறுவதாக நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். *நூல் : அபூதாவூத்*

அல்லாஹ் பல வசனங்களில் காலத்தின்மீதும், நேரத்தின்மீதும் சத்தியம் செய்துள்ளான். (89:12, 93:12, 103:1,2) அல்லாஹ் ஒன்றின்மீது சத்தியம் செய்கிறானென்றால் அதன் நோக்கம் மக்களின் கவனத்தை அதன் பக்கம் திருப்பவும், அதன் முக்கியத்துவத்தை உணர்த்தவும் தான்.

> **"காலத்தின்மீது சத்தியமாக மனிதன் நஷ்டத்திலிருக்கின்றான். ஆயினும் எவர்கள் ஈமான் கொண்டு நற்செயல் செய்து சத்தியத்தைக் கொண்டு ஒருவருக்கொருவர் உபதேசம் செய்து, மேலும் பொறுமையைக் கொண்டும் ஒருவருக்கொருவர் உபதேசிக் கிறார்களோ அவர்களைத் தவிர".**

*அல்குர்ஆன் 103:1,2,3*

அல்லாஹ் காலத்தின்மீது சத்தியமிட்டுச் சொல்லும் இரண்டு செய்தி . 1. ஒட்டு மொத்த மனித சமுதாயமே நஷ்டத்தில் இருக்கிறார்கள். தங்கள் வாழ் நாள் நேரத்தை வீணில் கழித்து விட்டது தான் எப்படி?

ஒரு சில மனிதர்கள், தங்களுக்கு கொடுக்கப்பட்ட வாழ் நாள் நேரத்தை மிகச்சிறப்பாக பயன்படுத்தி மனித சமுதாயத்திற்கு மாபெரும் நன்மைகள் செய்துள்ளதை நாம் மறந்து விடமுடியாது. அன்றைய ஐசக் நியூட்டன், ஐன்ஸ்டீனிலிருந்து இன்றைய அறிவியல் அறிஞர்கள் வரை, அனைவரும் தமது வாழ்நாளை ஆராய்ச்சியில் செலவு செய்து மண்ணுலக மக்களுக்கு மாபெரும் நன்மை செய்துள்ளனர். இன்று நாம் காணும், மின்சாரம், கார், ரயில், விமானம், விண் வெளிப்பயணம், தொலைபேசி, தொலைக்காட்சி அனைத்து சாதனங்களையும் மக்களுக்காகத் தந்தனர்.

வேறு சில மனிதர்கள் ஏழை எளிய மக்களின் கல்வி, மருத்துவம், சுகாதாரம் இவற்றின் முன்னேற்றத் திற்காக பெருங் கொண்ட நிறுவனங்களை நடத்தி மக்கள் சேவையில் தங்கள் வாழ்நாள் நேரத்தை அர்ப்பணித்துள் ளனர். நிச்சயம் இவர்கள் இரு சாராரும் நேரத்தை வீணாக்கி விடவில்லை. ஆனாலும் இவர்கள் வெற்றி பெற முடியுமா? நிச்சயம் முடியாது ஏன்?

> இறைவன் மனிதனைப் படைத்ததன் நோக்கமே தன்னை வழிபடவே **“(எனக்கு வழிபட்டு என்னை) அடிபணிவதற்காகவேயன்றி ஜின்களையும், மனிதர்களையும் நான் படைக்கவில்ல”.**

*அல்குர்ஆன் 51:56,57*

தனது பகுத்தறிவு கொண்டு படைத்தவனை அறிந்து அவனை வழிபட வேண்டும், என்ற அடிப்படை அறிவு இல்லாமல் இவர்கள் என்ன சேவை மக்களுக்குச் செய்தாலும் அது வீணான செயலாக விழலுக்கு இறைத்த நீராகவே போகும்.

மக்களுக்குப் பாடுபட்டவர்களுக்கு மக்களே கூலி கொடுத்து விட்டார்கள். பட்டம், பதவி, பாராட்டு, பரிசு! அழியாத மறுமை வாழ்விற்கு ஒன்றும் இன்றி நரகத்தை சுவைப்பதை தவிர வேறில்லை. இவ்வுலக வாழ்க்கையை வளமாக்க பாடுபட்ட அறிவியல் மேதைகளைப் பார்த்து அல்லாஹ் கூறுகிறான்.

> **“எவரேனும், இவ்வுலக வாழ்க்கையையும், அதன் அலங்காரத்தையும் (மட்டும்) விரும்பினால், அவர்கள் செயலுக்குரிய பலனை, இவ்வுலகிலேயே நாம் பூரணமாக கொடுத்து விடுவோம். அதில் அவர்கள் குறைவு செய்யப்படமாட்டார்கள். (எனினும்) மறுமையிலோ இத்தகையோருக்கு (நரக) நெருப்பைத் தவிர வேறொன்றுமில்லை. அவர்கள் செய்த (ஆராய்ச்சி, அற்புதம்) யாவும் இங்கு அழிந்து விட்டன. அவர்கள் செய்து கொண்டிருப்பவையும் வீணானவையே”**

*அல்குர்ஆன் 11:15,16*

உலகத்தை வளப்படுத்த பாடுபட்டனர். ஆனால் மறு உலகத்தை கோட்டை விட்டனர். இப்பொழுது கூறுங்கள் இவர்கள் நல்ல முறையில் நேரத்தை செலவழித்தவர்களா? அல்லது நேரத்தை வீணாக்கிய வீணர்களா? இவ்வலகத்தின் பார்வையில் மாமேதைகள். ஆனால் அல்லாஹ்வின் பார்வையில் அக்கிரமக்காரர்கள். ஆம்! இணைவைப்பவை விட பெரி அக்கிரமம் என்ன இருக்கிறது?

> **“அல்லாஹ்வையன்றி மற்றவைகளை வழிபட்ட இந்த அக்கிரமக்காரர்கள் பகிரங்கமான வழிகேட்டில்தான் இருக்கின்றனர்”.**

*அல்குர்ஆன் 31:11*

> ஆனாலும் இவர்கள், நேரத்தை வீணடித்த செயலை எண்ணி மறுமையில் கதறுவார்கள். **“தாங்களும் முஸ்லிம்களாக இருந்திருக்க வேண்டுமே, என்று நிராகரிப்பவர்கள் (மறுமையில் பெரிதும்) ஆசைப்படுவார்கள்”.** *அல்குர்ஆன் 15:2*

படைத்த அல்லாஹ்வை விசுவாசம் கொண்டு, செய்யப்படக்கூடிய நற்செயல்களுக்கே கூலி உண்டு. அல்லாஹ்வை நிராகரித்து விட்டு, எத்தகைய நற்செயல்கள் செய்தாலும் மறுமையில் நரக நெருப்புதான் கூலியாக கிடைக்கும். பெரும்பான்மை மக்கள் நஷ்டத்திலிருப்பதன் காரணம் இதுதான்.

ஈமான் கொண்டு முஸ்லிம்களாக ஆகி விட்டாலும் வெற்றி பெற முடியாது. அவர்கள் நற்செயல்களை செய்ய வேண்டும். சத்தியத்தைக் கொண்டு ஒருவருக்கொருவர் உபதேசிக்க வேண்டும். அதில் பொறுமையைக் கைக்கொண்டு ஒருவருக்கொருவர் உபதேசம் செய்ய வேண்டும்.

முஸ்லிம்களில் இவர்கள் மட்டுமே, காலத்தின்மீது சத்தியம் செய்த இறைவன் சொன்னபடி நேரத்தை நன்மையின்பால் செலவு செய்த வெற்றியாளர்கள். இன்று நாம் நேரத்தை எப்படி செலவு செய்கின்றோம் என்று சற்று சரி பார்ப்போமா சகோதரர்களே!

நமது ஆயுளில் மூன்றில் ஒரு பங்கு தூக்கத்திலேயே கழிந்து விடும்; மீதி உள்ள 16 நேரத்தில் 8 மணி நேரம் வாழ்க்கைக்கான பொருளாதார தேடலில் செலவாகி விடும். மீதி உள்ள 8 மணி நேரம் தான் அவனது பொறுப்பில் இருக்கும். இந்த 8 மணி நேரத்தில் தான் மனைவி மக்களுக்கு செய்யவேண்டிய கடமைகள், உறவினர்களுக்கு செய்ய வேண்டியது, ஓய்வு, பொழுது போக்கு, மருத்துவம், பிரயாணம், இபாதத் எனப்படும் நற்செயல்கள் எல்லாவற்றையும் செய்ய வேண்டும். இந்த சிறு துளி நேரத்தையாவது நாம் பயனுள்ள முறையில் மறுமைக்காக செலவு செய்கிறோமா? நிச்சயம் இல்லை. நமது நல்ல பொழுதுகள் எப்படியெல்லாம் பழுதாகிறது. ஒவ்வொன்றாக பார்க்கலாம்.

இன்று நம்மை பீடித்திருக்கும் மாபெரும் தொற்று நோய் திரைப்படமும் தொலைப்படமும் தான். இதற்கு அடிமை ஆகாதவர்களை விரல் விட்டு எண்ணி விடலாம். இந்த தொ(ல்)லைப்பெட்டி இல்லாத நாடோ, வீடோ இல்லை. வீட்டிலிருக்கும் பெண்களின் நேரங்களை **"யானை வாய் கரும்பாக"** தொடர் சீரியல்கள் விழுங்குகின்றன. சின்னத்திரை நாயகிகளோடு தினமும் அழுது, கண்ணீரால் நேரத்தைக் கரைக்கிறார்கள் நம் பெண்கள்.

**"ஊமை வெயிலுக்கு உருகி விட்ட வெண்ணெய்கள்"** நாளை நரக நெருப்பிற்கு என்ன செய்வார்களோ? கிரிக்கெட் சீஸன் ஆரம்பித்து விட்டாலோ அவ்வளவுதான். இந்தியா நாடே தொலைபெட்டிக்குள் முடங்கி விடும். ஊண், உறக்கம் தொழுகை எல்லாமே கிரிக்கெட் ஆட்டம் முடிந்த பிறகு தான்.

சின்னத் திரையின் அக்காள், மூத்தவள் மூதேவி, **"திரைப்பட"**த்தின் தீமைகளை சொல்லி மாளாது. மூன்று மணி நேரம் முழுதாக நம்மை விழுங்கி விட்டு அத்துடன் அது ஒழிந்தால் பரவாயில்லை.

இந்தத் திரைப்படங்கள் இளைஞர்களுக்கு சொல்லும் **'மெஸேஜ்'** செய்தி என்ன தெரியுமா? **காதல் ... காதல் .... காதல் .... .** இந்தக் காதல் இல்லையேல் உலகம் இல்லை. நீ பிறவிப் பயன் எடுத்ததே காதலிக்கத்தான். பாடுகிறார்கள்.

**"காதல் இங்கு இல்லையென்றால் பூமியும் இங்கில்லை; காதலின்றி யாருமே இல்லை; "வாலிய உள்ளங்களே .. காதலை வெல்லுங்கள்". "கையை கட்டி நிக்கச் சொன்ன காட்டு வெள்ளம் நிக்காது" காதல் மட்டும் இல்லையென்றால் பூமி இங்கு சுத்தாது";** ஆக **"பூமி சுற்றுவதே காதலுக்காகத் தான். ஆகவே நீயும் எவளையாவது தேடிப்பிடித்து ஊர்ச்சுற்று"** என்று இளைஞர்களை உசுப்பி விட்டு வெளியேற்று கின்றன. இதன் விளைவு!

கேர்ள் பிரண்ட், பாய் பிரண்ட், லவ்வர்ஸ், டேட்டிங், மீட்டிங் என்று பெண்களோடு சுற்றுவது; இறுதியில் இவர்கள் காதல் முற்றி, விடுதி லாட்ஜ்களில் காமமாக கரையேறும். இந்த வாய்ப்பும் கிடைக்காத இளைஞர்கள் பெண்களை கேலி கிண்டல் செய்து தன் மன வக்கிரத்தை தணித்துக் கொள்வார்கள். இன்னும் ஒரு சில நமது இளைஞர்கள் (முஸ்லிம்கள்) நடிகர்களுக்கு மன்றம் வைத்து மன்றாடுவார்கள். நம் அனைவரது நேரமும் ஏதாவதொரு வழியில் திரை தொலைப்படத்தால் தொலைந்து கொண்டிருக்கிறது.

இன்றைய இளைஞர்களுக்கு மூஸா(அலை) அவர்களின் வாலிபப் பருவம் வழிகாட்டுகிறது. தன் நாட்டை விட்டு ஓடிய மூஸா(அலை) அவர்கள் **'மத்யன்'** என்ற ஊர் எல்லையை அடைகிறார். அங்கிருந்த தண்ணீர் துறயில் ஆண்கள் கூட்டமாக நின்று தங்கள் கால்நடைகளுக்கு தண்ணீர் புகட்டுகின்றனர்.

இரு பெண்கள் மட்டும் தனியாக ஒதுங்கி நிற்பதைக் கண்டு அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் **"என்ன விஷயம்"** என்று வினவுகிறார்.

**"வயது முதிர்ந்த தந்தையைத் தவிர வேறு ஆண்கள் இல்லாததால், இந்த ஆண்கள் சென்ற பிறகே நாங்கள் தண்ணீர் எடுக்க முடியும்"** என்று அப்பெண்கள் தங்கள் இயலாமையைக் கூறினர். எனவே இளைஞர் மூஸா(அலை) அவர்களுக்கு உதவி செய்கிறார். பின்பு ஒரு மர நிழலில் ஓய்வெடுக்கிறார். பின்பு அப்பெண்களின் தந்தையின் அழைப்பை ஏற்று அவரிடம் தம் நிலையை விவரிக்கிறார்கள்.

அப்போது அப்பெண்களில் ஒருத்தி **"இவர் நல்லவராகவும், பலசாலியாகவும், நம்பிக்கையாளி யாகவும் இருப்பதால் நாமே வேலைக்கு வைத்துக்கொள்ளலாம்"** என்று பரிந்துறைக்கிறார். மகளின் ஆலோசனைப்படி தந்தை, மூஸா(அலை) விடம் **"எட்டு அல்லது பத்து ஆண்டுகள் என்னிடம் வேலை செய்தால், அதையே மஹராக ஏற்று என் மகளை உனக்குத் திருமணம் செய்து தருகிறேன்"** என்கிறார். அதற்கு மூஸா(அலை) சம்மதித்து, அளித்த வாக்குப்படி தவணை முடிந்து திருமணம் முடிக்கிறார்கள்.

இங்கு நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய காட்சி, இயலாமையால் துன்பப்பட்ட பெண்களிடம் இளைஞர் மூஸா(அலை) எப்படி நடந்து கொண்டார். பலஹீனமான வர்களுக்கு உதவி செய்து, அவர்களிடம் கண்ணியமாக நடந்து கொண்டார். அவரது கண்ணியத்திற்கு அப்பெண்களின் சாட்சியமே போதுமானது.

> **"நிச்சயமாக இவர் மேலானவர்; பலமுள்ளவர்; நம்பிக்கையானவர்".** *அல்குர்ஆன் 28:27*

முஸ்லிம் இளைஞர்களிடம் இருக்க வேண்டிய முத்தான மூன்று பண்புகள். இன்று இவை ஏதேனும் நம்மிடம் உள்ளதா? சிந்திக்க வேண்டும் சகோதரர்களே! நமது இளமைப்பருவமும் நேரமும் எங்கு போய்க் கொண்டிருக்கிறது? யூசுப்(அலை) அவர்கள் சரித்திரத்தை நீங்கள் படிக்கவில்லையா?

> **"விரட்டிக்கொண்டு வந்த காதலைக் கண்டு விரண்டோடினார்கள்; அதுவும் எதுவரை சிறைச்சாலைவரை". இதோ யூசுப்(அலை) அவர்கள் கூறுவதை சற்று கேட்போமா? "என் இறைவனே! இவர்கள் என்னை எதன் பக்கம் அழைக்கிறார்களோ, அ(த்)தீயதை விடச் சிறைக் கூடமே எனக்கு அதிக விருப்ப முடையதாகும்".** *அல்குர்ஆன் 12:33*

நபிமார்களின் வரலாறுகளை அல்லாஹ் திருமறையில் குறிப்படும் பொழுது அதன் நோக்கத்தை விவரிக்கின்றான்.

> **"அவர்களின் வரலாறுகளில் அறிவுடை யோருக்கு படிப்பினை உள்ளது".**

*அல்குர்ஆன் 12:111*

அன்புக்கும் நேசத்திற்கும் கதவு திறக்காமல் வெறும் ஆபாசமாகிப் போன காதல் நமக்குத் தேவையா? இன்றைய காதல்! உள்ளம் சார்ந்த ஈர்ப்பாக இல்லாமல் உடல் சார்ந்த இச்சைகளை ஊக்குவிக்கும் களமாக, நுகர்வு கலாச்சாரத்தின் தளமாக மாறி விட்டதே!

இதற்காக உங்கள் நேரம் விரையமாகி, நீங்களும் வீரியத்தை இழக்க வேண்டுமா? சிந்தியுங்கள். இளமையை நன்மையின்பால் செலுத்துங்கள். அதற்குக் கூலி என்ன தெரியுமா? மறுமையில் அல்லாஹ் **“ஹூருல்ஈன்கள்”** என்ற பருவ மங்கைகளை பரிசாகத் தரக்காத்திருக்கின்றான். இந்த உயர்ந்த பரிசைப்பெற உனக்கு ஆசையில்லையா? வீழ்ந்த நேரங்கள் போதும் சகோதரனே! இனியும் தாமதிக்காதே! பயணம் முடிவதற்குள் நேரான பாதைக்கு வந்து விடு!

> **“உனக்கு கொடுக்கப்பட்ட ஆயுள் கல்வி, அறிவு, செல்வம், வாலிபத்தை எப்படிச் செலவழித்தாய்?”** என்ற கேள்விகளுக்கு பதிலளிக்காமல் உன் கால்கள் நகர முடியாது.

*அறிவிப்பவர் : முஆது இப்ன் ஜபல்(ரழி),*
*நூல்கள் : திர்மிதி, பைஹகி*

என்று நபி(ஸல்) அவர்கள் கூறியதை மறந்து விடாதே! உன்னை விட்டு இளமை கடப்பதற்குள் **‘இபாதத்’**தை சேகரித்துக்கொள். முதுமையில் உன்னால் காதலிக்கவும் முடியாது. இபாதத்திற்கும் இயலாது.

ஒரு முஸ்லிமானவன், நல்லவனாக, வல்லவனாக, நம்பிக்கையாளனாக இருந்தால் மட்டுமே வெற்றி பெற முடியும். ஆகவே அன்புச் சகோதரர்களே! திரைப்பட, தொலைப்பட, ஒலி, ஒளிகளிலிருந்து நீங்கள் முற்றாக ஒதுங்கிக் கொள்ளுங்கள். இவைகள் உங்களை நரகிற்கு அழைக்கும் ஷைத்தானின் ஆயுதங்கள். ஆகவே நீங்களும் ஏமாந்து விடவேண்டாம். ஷைத்தானும் உங்களை ஏமாற்றிட வேண்டாம்.

இன்று வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருக்கிறது. குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை அனைவரையும் வெள்ளம் உருட்டிப் புரட்டி தன் நீரோட்டத்தில் இழுத்துச் சென்று கொண்டிருக்கிறது. இந்த வெள்ளத்தில் மக்கள் மூழ்கி மூச்சுத் திணறிக் கொண்டிருக்கிறார்கள். எங்கே? கங்கையிலா, காவிரியிலா என்று கேட்டு விடாதீர்கள். அங்கு குடிப்பதற்கே தண்ணீர் இல்லை. பிறகு எப்படி மூழ்க முடியும். இங்கு நாம் சொல்லும் வெள்ளம் இசை என்னும் இன்ப வெள்ளம்; 24 மணி நேர இன்னிசை மழையில் நனைந்து வெள்ளக்காட்டில் குப்பை கூளமாக மிதந்து கொண்டு செல்பவர்கள் வேறு யாரும் இல்லை. நாம் தான் சகோதரர்களே! இதிலிருந்து கரையேறி விடுவோமா? இல்லை பிறவிப் பெருங்கடலை அடைந்து அங்கேயே அடங்கி விடுவோமா?

**“மனிதர்களில் சிலர் இருக்கிறார்கள்; அவர்கள் அறிவில்லாமல் வீணான பேச்சுக்களை விலைக்கு வாங்கி (அவற்றால் மக்களை) அல்லாஹ்வின் பாதையிலிருந்து வழிகெடுக்கவும், அல்லாஹ்வின் பாதையை பரிகாசமாக்கிக் கொள்ளவும் முயல்கிறார்கள்; இத்தகையோருக்கு இழிவு தரும் வேதனையுண்டு”.** *அல்குர்ஆன் 31:6*

இவ்வசனத்திற்கு விளக்கமளித்த இமாம் முஜாஹித்(ரஹ்) அவர்கள் **‘வீண் பேச்சு’** என்று அல்லாஹ் கூறுவது இசைப்பாடலைத்தான் என்று கூறுகிறார்கள். மேலும் அவர்கள், அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத்(ரழி) அவர்கள் பத்து முறை அல்லாஹ்வின்மீது சத்தியமிட்டு **31:6** வசனம் குறிப்பிடுவது **“இசையைக் கேட்பதைத்தான்”** என்று கூறினார்கள். நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

**“என் சமுதாயத்தில் ஒரு கூட்டம் வரும்; அவர்கள் இசைக்கருவிகளை ஹலால் ஆக்குவார்கள்.......”**

*அறிவிப்பவர் : அபூமாலிக் அல் அஷ்ரி(ரழி), நூல் : புகாரீ*

இமாம் மாலிக்(ரஹ்) அவர்களிடம் இது பற்றிக் கேட்ட பொழுது, **“இசை நம்மிடையே சிற்றின்பத்தை தூண்டக்கூடியதாக உள்ளது”** என்றார்கள். இப்னு மஸ்வூது(ரலி) அவர்கள் **“இசையானது நமது உள்ளத்தில் முனாஃபிக்தனம் வளர காரணமா கிறது; எப்படி எனில் தண்ணீரின் காரணமாக கரைகளில் செடி வளர்வது போல்”** என்று கூறினார்கள்.

*அல் ஜும்மா, பாகம் 2, பக். 11 அமெரிக்கா மாத இதழ்*

தொடர்ந்து திரை இசையை கேட்டு வருபவர்களுக்கு இறை நினைவு வரவே வராது. பள்ளியில் பாங்கு சொல்வார்கள். இவர் காதில் அது ஏறாது. டி.வி.ல் ஒலி, ஒளியில் மூழ்கி இருப்பார்கள். அல்லது காதில் ஹெட்போன் மாற்றி அதிலேயே மெய் மறந்து உருகிக் கொண்டிருப்பார்கள்.

**பெண்கள் அந்நிய ஆண்களிடம் பேசும் போது நளினமாக குழைந்து பேசுவதை அல்லாஹ் தடைசெய்கின்றான்.** (அல்குர்ஆன் 33:32) **மேலும் அவர்கள் கால்களில் அணிந்திருக்கும் கொலுசு மணியின் ஜல், ஜல் ஓசை கூட ஆளை திசை திருப்பி விடும் என்பதால் அதையும் அல்லாஹ் தடை செய்கிறான்.** (பார்க்க அல்குர்ஆன் 24:21)

பெண்களின் பேச்சிலேயே ஆண்கள் தடுமாற வாய்ப்பிருக்கிறது. இன்றைய திரை இசை பாடல்கள் எந்தளவு விரக தாபத்தில், **“இந்த மட்டும் போதுமா? இன்னும் கொஞ்சம் வேண்”டுமா?** என்று குழைந்து நெளிந்து ஆபாசமாக அழைக்கிறார்கள்.

இந்த இசையில் வீழ்ந்த இஸ்லாமிய இளைஞன் எழுந்திருப்பது எப்போது? கொஞ்சம் சிந்தித்துப் பார்ப்போமா?

இசையின் மூலம் இறைவனை அடையலாம் என்ற இந்து மதத்தின் கருத்தை இன்று எல்லோரும் காப்பி அடித்துக் கொண்டிருக்கிறோம். குறிப்பாக மேலை நாட்டு கிருஷ்தவர்கள் முழு இசைப்பைத்தியங்களாகவே மாறி விட்டார்கள். ஆபாச சின்றின்ப பாடலை அரை குறை ஆடையுடன் தளுக்கி குலுக்கிப் பாடும் மடோனாக்களும், பிரிட்டனி ஸ்பியர்ஸ்ம் வான தேவதைகளாக வலம் வருகிறார்கள்.

ஆனாலும் இன்றைய கிருஷ்தவர்களின் நம்பிக்கைக் கெதிராக அவர்கள் பைபிள் கூறுவதை மறந்து விட்டார்கள். மது போதையும் இசை போதையும் அவர்களை மறக்கடித்து விட்டது.

> **“சாராயத்தை நாடி அதிகாலமே எழுந்து, மதுபானம் தங்களை சூடாக்கும்படி தரித்திருந்து இருட்டிப் போகுமளவும் குடித்துக் கொண்டேயிருப்பவர்களுக்கு ஐயோ!**
>
> **அவர்கள் சுரமண்டலத்தையும், தம்புருவையும், மேளத்தையும், நாத சுரத்தையும் மதுபானத் தையும் வைத்து விருந்து கொண்டாடு கிறார்கள். ஆனாலும் கர்த்தரின் கிரியையை நோக்கிறதும் இல்லை; அவர் கரத்தின் செய்கையை சிந்திக்கிறதும் இல்லை”.**

*பைபிள் : ஏசாயா 5:11,12*

முஸ்லிம் சகோதரனே! இந்த நிலை உனக்கு தேவையா? நமது நேரங்களை பயனற்ற வீண் பேச்சுக்களை, பாடல்களை கேட்பதற்காக செலவு செய்ய வேண்டுமா? “அவர்கள் வீணான பேச்சுக்களை விலைக்கு வாங்கி” என்று அல்லாஹ் குறிப்படுவது வேறு யாரையும் அல்ல; நம்மைத்தான். அல்லாஹ் கொடுத்த செல்வத்தை எத்தனை, சினிமா, ஆடியோ, வீடியோ, கேஸட்களிலும் சி.டி.களிலும் செலவிட்டிருப்போம். நாளை இந்த கேஸட்டுகளும், சி.டி.களும் நமக்கு எதிராக “இந்த மனிதன் தொழுகைக்கு பள்ளிக்குப் போகாமல் திரைப்படத்தையும், பாட்டையும்தான் கேட்டான்” என்று சாட்சி சொன்னால் நாம் தப்ப முடியுமா? சிந்தித்துப் பார்ப்போம்.

நம்முடைய கால நேரத்தை வீணான காரியங்களில் செலவழித்தால் பின் அமையப்போகும் மறுமை வாழ்க்கை மிகத்துன்பமாக இருக்கும். நரக நெருப்பு 70 மடங்கு அதிகமிருக்கும். சூடான டீ கிளாஸை தொடுவதற்கே நாம் அஞ்சுகிறோம். 70 மடங்கு நரக நெருப்புக்கு நாம் அஞ்ச வேண்டாமா? நரகில் வீழ்ந்து விட்டால் வெளியேற முடியாதே. அந்நரகத்தில் அவர்கள்,

> **“எங்கள் இறைவா! நீ எங்களை இதை விட்டு வெளியேற்றுவாயாக! நாங்கள் வழக்கமாக செய்து கொண்டிருந்ததை (கேட்டுக் கொண்டிருந்த சிற்றின்ப பாடல்களை) விட்டும், நற்செயல்களை செய்வோம்”** என்று கூறிக்கதறுவார்கள். (அதற்கு அல்லாஹ்) **சிந்தித்துப் பார்க்கக் கூடியவன் அதில் சிந்திக்கும் பொருட்டு, நாம் உங்களுக்கு நீண்ட ஆயுளைக்**

**கொடுக்க வில்லையா? உங்களிடம் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவரும் வந்திருந்தார்; ஆகவே நீங்கள் செய்த அநியாயத்தின் பலனை சுவையுங்கள்; ஏனென்றால் அநியாயக்காரர்களுக்கு உதவியாளர் எவருமில்லை (என்று கூறுவான்)".** *அல்குர்ஆன் 55:37*

என தருமை சகோதரனே! நமக்கு இந்த இழி நிலை வர வேண்டுமா? அல்லாஹ் பாதுகாப்பானாக! இசை நமக்கு இம்சையாக மாறிவிடக்கூடாது சகோதரா! **"செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்"** என்று கூறுவார்கள். செவி எனும் அல்லாஹ் வழங்கிய அருட்கொடையை அவனுக்கு பொருத்தமான வழியிலே செலவு செய்வோம். அல்லாஹ்வையும் மறுமையையும் நினைவூட்டும் அழகிய பயான் சொற்பொழிவுகளை நாம் கேட்போம். பிறரையும் கேட்கச் செய்வோம். மார்க்க அறிஞர்களின் உரைகள் அடங்கிய கேஸட், சி.டி.களை வாங்கிக்க கேட்டு அதன் படி செயல்பட்டு, எல்லா நேரங்களையும் நமக்கு நன்மை தரும் நேரமாக மாற்றுவோம்!

நவீன அறிவியலின் ஒட்டு மொத்த தொகுப்பே **'இன்டெர்நெட்'.** உட்கார்ந்த இடத்திலிருந்தே உலகை சுற்றி அறிவமுதம் பெறலாம். அறிவைத் தேடுவதற்கும் கற்பதற்கும், பிறருக்கும் கற்றுக் கொடுப்பதற்கும் உள்ள ஒரு அற்புதமான சாதனம். அதை நாம் எப்படி பயன்படுத்துகிறோம்? சற்று பார்ப்போமா?

அறிவை தேடுவதற்குப் பதிலாக, உள்ள அறிவையும் மழுங்கடித்து மரத்துப் போக வைக்கும் **'வெப் சைட்'**களை தேடிக் கொண்டிருக்கிறோம். நெஞ்சத்தை கிள்ளும் வெட்டி அரட்டைகளில் **(Chatting)** நேரத்தை வெட்டிப் புதைக்கிறோம்.

இவர்கள் இன்டர்நெட்டில் அமர்ந்து விட்டால், நேரம் போவதே தெரியாது. அப்படியொரு ஏகாந்த நிலையில் இருப்பார்கள். லுஹர், அஸர், மஃரிப் எனும் நல்ல நேரங்கள் இவர்களை கடந்து சென்று கொண்டே இருக்கும். ஆனால் இவர்கள் கருமமே **'கண்'**ணாக இருப்பர். ஆம்! இவர்கள் தான் இன்டர் **'நெட்'** வலையில் சிக்கியமீன்கள். இளமையையும் நேரத்தையும் எப்படி செலவு செய்தாய்? என்ற கேள்விக்கு நம்மிடம் என்ன பதில் உள்ளது?

கடலில் வலையில் பிடிபபட்ட மீன்கள் இறுதியில் அடுப்படி நெருப்பில் பொரிக்கப்படும், **'நெட்'** வலையில் சிக்கிய நம் கதியும் நரக நெருப்பு தானோ? அதுவும் தோல் கருகக் கருக புதுத்தோல் போட்டு பொசுக்கப்படும், **"கடல் மீன்களை மனிதர்களுக்கு சுவையான உணவாக"** அல்லாஹ் ஆக்கியுள்ளான். (அல்குர்ஆன் 16:4) 'நெட்' வலையில் மாட்டிய மீன்களை யார் சுவைப்பது? அவர்களே அந்த வேதனையை சுவைக்க வேண்டும். இதோ அல்லாஹ் கூறுகிறான்.

**'எரிக்கும் வேதனையை நீங்கள் சுகித்துப் பாருங்கள்"** நாம் கூறுவோம்.

*அல்குர்ஆன் 3:181*

அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக! அன்புச் சகோதரர்களே! இந்த நிலை நமக்குத் தேவையா? சிந்திக்க வேண்டாமா?

> **"அறிவு ஒரு முஸ்லிமைப் பொறுத்தவரைக் காணாமல் போன சொத்து. அது கிடைக்குமிடமெல்லாம் சென்று ஆவலுடன் சேர்த்துக் கொள்ள வேண்டும்"** என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்களே!. *நூல் : திர்மிதி*

நாம் அறிவைத் தேடி எங்கும் அலைந்து சிரமப்படாமல், இன்று அறிவுச் சுரங்கம் இன்டர்நெட் வடிவில் நம்மை தேடி வந்துள்ளது. அதில் நல்லதை தேடுவோம்; கெட்டதை தள்ளுவோம்; நாம் தேடிய அறிவை பிறருக்கு இமெயில் செய்வோம்.

**"சாட்டிஸ்"** உரையாடல் மூலம் உலகெங்கும் செல்வோம். இஸ்லாத்தின் ஒளி படாது இருட்டில் வாழும் மக்களுக்கு வெளிச்சத்தை காட்டுவோம். ஒரு நாளில் ஒரு மனிதருடன் தொடர்பு கொண்டு **'தாவத்'** செய்தாலே நமது நன்மை தட்டு கனத்து விடும். நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

> **"இந்த உலகம் சபிக்கப்பட்டதாகும். இதிலுள்ளவைகளும் சபிக்கப்பட்டதாகும். (ஆனால்) அல்லாஹ்வை நினைவுகூர்வதும், அவனை அடையச் செய்யும் காரியமும், இன்னும் அறிஞனும், கற்றுக் கொடுக்கும் ஆசிரியனும் தவிர".**

*அறிவிப்பவர் : அபூஹுரைரா(ரழி),*
*நூல்கள் : திர்மிதி, இப்னுமாஜா, பைஹகீ*

சபிக்கப்பட்ட உலகிலிருந்து நம்மை தற்காத்துக் கொள்ள அல்லாஹ்வை நினைப்பது, அவனை அடைய நற்செயல் செய்வது, கற்பது கற்றுக் கொடுப்பது. இந்த நான்கு நற்செயல்களையும் இன்டர்நெட்டில் நீ பெற்றுக்கொள்ள முடியுமே! செய்வோமா?

இழந்த நேரங்கள் எழுந்து வரா! இருக்கும் நேரங்களை மறுமைக்காக செலவு செய்வோம். இன்டர்நெட் நேரங்களை **'இபாதத்'** ஆக மாற்றுவோம்.

பாதை மாறிப் போனவர்களுக்கு நேர்வழி காட்டுவோம். மேலை நாட்டுக் கலாச்சாரம் மக்களை விஞ்ஞான இருட்டிற்கே மீண்டும் இழுத்துச் செல்கிறது. இருட்டில் சிக்கிய நன்மக்கள் சத்திய ஒளியை தேடி அலைகிறார்கள். உன் மூலம் சிறுமெழுகுவர்த்தி ஒளிக்கீற்று கிடைக்கட்டுமே! வாழ்க்கை படகில் தத்தளிப்பவர்களுக்கு அது கலங்கரை விளக்கமாக மாறலாம் அல்லவா?

வா! சகோதரா வா! வீணில் மடிந்த நேரங்கள் மீண்டு வராது; கையில் உள்ள நேரத்தைக் கொண்டு கரையேறுவோம். பிறரையும் கரையேற்றுவோம். நபி(ஸல்) அவர்கள் கூறியதை மனதில் பதிப்போம்.

> **"கற்பவரும் கற்றுக் கொடுப்பவரும் நேர்வழியில் இருக்கின்றனர். இந்த நிலை**

**இல்லாதவர்களிடம் எந்த நல்வழியுமில்லை".**

*நூல் : இப்னு மாஜா*

நம் நேரங்களை பயனுள்ளதாக அல்லது பயனற்றதாக மாற்றுவதில் பெரிதும் பங்கெடுப்பவர்கள் நம் நண்பர்கள். ஆகவே நண்பர்களை தேர்வு செய்வதில் மிகக் கவனமாக இருக்க வேண்டும். ஏனெனில் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

> **"ஒருவன் தன் நண்பனின் மார்க்கத்தில் இருக்கின்றான். ஆகவே, மனிதன் தான் யாரோடு நட்பு கொள்கிறான் என்பதை பார்த்துக் கொள்ள வேண்டும்".**

*அறிவிப்பவர் : அபூஹுரைரா(ரழி),*
*நூல்கள் : அஹ்மத், அபூதாவூத், திர்மிதி, நஸயீ*

இன்று நமது நண்பர்கள் எப்படி இருக்கிறார்களோ அப்படித்தான் நாமும் இருக்கிறோம். இனம் இனத்தோடு சேர்வது போல் நான்கு நண்பர்கள் சேர்ந்து விட்டாலே, வெட்டி அரட்டை, ஊர்வம்பு, அரசியல், சினிமா, அவதூறு போன்ற அத்துனை செயல்களும் அரங்கேறும். நமது நேரத்தை பாவத்தில் பதிவு செய்து கொண்டிருப்பதை நாம் உணர்வதில்லை.

வீண் பேச்சில், வெட்டி விவாவத்தில் ஈடுபடுபவர் தன்னுடைய சிந்தனை, நாக்கு இரண்டையும் கட்டுப்படுத்த முடியாமல் மனம் போன போக்கில் அள்ளி விடுவார். சில நேரங்களில் அவரது பேச்சு அவருக்கு எதிராகவே ஆபத்தில் மாட்டி விடும். சிலர் சிலரை சிரிக்க வைப்பதற்காக வீணான அவதூறுகளை ஜோக்காக கூறி சிரிக்க வைப்பார்கள்.

> **"ஒரு மனிதர் சில வார்த்தைகளை உதிர்க்கிறார். அவரை சுற்றி உள்ளவர்கள் சிரிக்கிறார்கள். ஆனால் அவரோ வானத்திற்கும் பூமிக்கும் இடைப்பட்ட தூரத்திற்கு தூக்கி எறியப்படுகிறார். நாக்கு இடறி விடுவதால் ஏற்படும் காயத்தை விட, கால் இடறினால் ஏற்படும் காயம் குறைவு"** என்று நபி(ஸல்) அவர்கள் கூறியதை மனதில் வைக்கவேண்டும். *நூல் : பைஹகீ*

ஒரு நல்ல முஸ்லிம் பயனற்ற பேச்சிலோ செயலிலோ ஈடுபடக் கூடாது. வெட்டிப் பேச்சும் வீண் விவாதமும் இறுதியில் அடிதடியில் முடியும். **"கூடா நட்பு கேடாய் முடியும்"** என்பதற்கிணங்க நல்ல நண்பர்களை தேர்ந்தெடுக்க வேண்டும்.

நமக்கு பேச்சை கற்றுக் கொடுத்தவன் அல்லாஹ்(ஜல்) என்ன பேச வேண்டும்? எதை பேசக்கூடாது என்றும் அல்லாஹ் கூறிவிட்டான்.

> **"[illegible]"**

**அவனே மனிதனுக்கு பேசவும் கற்றுக்கொடுத்தான் .** *அல்குர்ஆன் 55:4*

**“இன்னும் அவர்கள் வீணான பேச்சு செயல் ஆகியவற்றை விட்டு விலகி இருப்பார்கள்”**

*அல்குர்ஆன் 23:14*

**“எம் மனிதருக்கும் நல்லதையே சொல்லுங்கள்”** *அல்குர்ஆன் 2:89*

**“அல்லாஹ்விடம் மிகவும் அதிகமாக வெறுக்கப்படக்கூடியவர்கள் சர்ச்சைகள் நிறைந்த விவாதங்கள் செய்பவர்களே”** என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். *நூல் : புகாரீ*

நல்ல தரமான கண்ணியமான வார்த்தைகளை பேசுவது நற்செயல்களில் ஒன்றாகவும் நல்ல பண்புகளில் ஒன்றாகவும் பதியப்படுகிறது. வார்த்தைகளில் நளினத்தையும், அறிவில் விவேகத்தையும் கைக்கொள்ள வேண்டும். தீய வார்த்தைகளை, கடினமான சொற்களை ஒரு போதும் பயன்படுத்தக்கூடாது. **“ஈஸா(அலை) அவர்கள் ஒரு பாதை வழியாகச் செல்லும் போது ஒரு பன்றி குறுக்கிட்டது. அப்போது அவர்கள், அதனை நோக்கி ‘ஸலாமத்தாக’ (சாந்தமாக) சென்று விடு என்று கூறினார்கள். அது சமயம் அவர்களை நோக்கி ‘பன்றியிடமா இவ்விதம் கூறுகிறீர்கள்’** என்று வினவப்பட்ட போது,

**“நிச்சயமாக என் நாவை தீய மொழிகளைக் கொண்டு பேசிப்பழக அஞ்சுகிறேன்”** என்று பதிலளித்தார்கள்.

*அறிவிப்பவர் : யஹ்யா இப்னு ஸஈது(ரழி), நூல் : முஅத்தா*

நபிமார்களின் பேச்சும், ஸஹாபா பெருமக்கள் பேச்சும் எப்பொழுதும் பெருந்தன்மையாகவும், அடக்கமாகவே இருக்கும்.

தல்ஹா இப்னு அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ப் அவர்களின் மனைவி ஒரு முறை கோபத்துடன் கூறினார்கள் **“உங்கள் நண்பர்களை விட மோசமானவர்களை நான் கண்டதில்லை. நம்மிடம் செல்வம் இருக்கும் போது, அவர்கள் நட்பாக பழகி பொருள்களை வாங்கிச் சென்றனர். நாம் ஏழையாகி விட்ட போது நட்பை கை விட்டு ஓடிவிட்டனரே”. இதைக்கேட்ட தல்ஹா அவர்கள் ‘உண்மையில் அவர்கள் நல்ல நண்பர்கள் என்பதற்கு இதுவும் ஒரு சான்றாகும். ஏனென்றால் நம்மிடம் தங்கள் தேவைகளை பெறுவதற்காகவே வந்தனர். இப்போது நம்மால் அவர்களது தேவைகளை நிறைவு செய்ய முடியாது. நம்மை சிரமப்படுத்தக் கூடாது என்பதற்காக அவர்கள் வருவதில்லை’** என்று கூறினார்.

*ஆதாரம் : அப்துல் மலீக் அல் காசிம் எழுதிய* **Road to Good Friends,** *பக்கம் 30, தாருல் ஸலாம், ரியாத்*

பாருங்கள் சரோதரர்களே! என்ன பெருந்தன்மையான பேச்சு அழகிய சொற்கள். இதைத்தான் அல்லாஹ் கூறுகிறான்.

**“ரஹ்மானுடைய (நன்றி மிக்க) அடியார்கள் (எவர்களென்றால்) பூமியில் அடக்கமாகவும், பணிவாகவும் நடப்பார்கள். மூடர்கள் அவர்களுடன் தர்க்கிக்க நேரிட்டால் ‘ஸலாமுன்’ என்று கூறி விடுவார்கள்”.**

*அல்குர்ஆன் 25:63*

இன்று நமது நாடுகளில் பிறர் குறைகளை பேசவும், பயனற்ற வீண் விவாதம் செய்யவும் பொது அரங்குகள் நடத்தப்படுகின்றன. இவர்கள் பேச்சில் நன்மைகளை விட தீமைகள் தான் அதிகமிருக்கும். பயனற்ற விவாதங்களிலேயே நேரத்தை ஒட்டி விடுவார்கள். அரட்டை அரங்கம், வழக்காடு மன்றம் பட்டி மன்றம் இவைகளெல்லாம் நேரத்தைக் கொல்லும் வெட்டி மன்றங்கள் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

சகோதரர்களே! நம்மிடையே சிலர் இருக்கிறார்கள். உண்மையிலேயே நேரத்தை பொன் போன்று நேசிப்பவர்கள். ஒரு நொடியும் வீணாக்க மாட்டார்கள். நேரம் போதவில்லை என்று புலம்பும் அளவிற்கு ஏராளமான தொழில்களில் புரண்டு கிடப்பார்கள். காலில் சக்கரம் கட்டிக் கொண்டும் பறந்தும் கொண்டும் இருப்பார்கள். இவர்கள் தான் பணம் படைத்தவர்கள். தொழிலதிபர்கள்; பிசினஸ்மேன்.

இவர்கள் பிறந்ததன் நோக்கமே **“மூன்றெழுத்தில் என் மூச்சிருக்கும்; பணம் பணம் பணமில்லையேல் பிணம்** என்று கூறி, பணத்தைச் சேர்க்க நடை பிணமாய் மாறிவிட்டவர்கள். இவர்களுக்கு உண்ண நேரமில்லை; உட்கார நேரமில்லை; உறங்கவும் நேரமில்லை. சதா பிரினஸ் சிந்தனைதான். ஆயிரத்தை எப்படி லட்சமாக்குவது, லட்சத்தை எப்படி கோடியாக்குவது என்ற கவலையிலேயே இருப்பார்கள். ஆகவே வந்த பணம் ஹலாலாக வந்ததா? அல்லது சென்ற பணம் ஹலாலான வழியில் செலவானதா? என்றெல்லாம் கவலைப் படுவதில்லை.

இவர்களைப் பொறுத்தவரை ஜகாத் என்பது ஒரு சில சில்லரை ரூபாய்களை தூக்கி எறிவதுதான். கடமை முடிந்து விட்டது. இவர்கள் போடும் பணத்தோட்டம் பிணத்தோட்டம் வரைதான் என்று அல்லாஹ் அருள் மறையாம் திருமறையில் சொல்லி காட்டுகிறான்.

**“செல்வம் பெருக்கும் ஆசை உங்களை (அல்லாஹ்வை விட்டும்) பராக்காக்கி விட்டது நீங்கள் கப்ருகளை சந்திக்கும் வரை”.**

*அல்குர்ஆன் 102:1,2*

**“ஆதமுடைய மகனுக்கு ஒரு தங்க ஓடை கிடைத்தால், இரண்டு தங்க ஓடை கிடைக்க ஆசைப்படுவான். அவனது வாயை (மண்ணறையின்) மண்ணைத் தவிர வேறெதுவும் நிரப்பாது”.**

*அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ்(ரழி), நூல் : புகாரீ*

இப்பொழுது சொல்லுங்கள் சகோதரர்களே!

***அன்புச் சகோதரர்களே!***

அல்லாஹ் உங்களுக்கு வைத்திருக்கும் **'நியமத்'**களை தேடுங்கள். ஆனால் தவறான வழிகளில் அச்செல்வத்தை தேடி நேரத்தையும் செயலையும் வீணடித்து விடாதீர்கள். சேகரித்த செல்வத்தை அல்லாஹ்வின் பாதையில் வாரி வழங்குங்கள் அல்லாஹ் கூறுகிறான்.

> **"என்னுடை அடியானே! செலவு செய்! செலவு செய்! செலவு செய்து கொண்டே இருப்பது உன்னுடைய கடமையாகும். அல்லாஹ்வின் கை நிரம்பி இருக்கிறது. இரவும், பகலுமாய் அள்ளி அள்ளித் தந்தாலும் குறைந்து விடாது".**

*நூல் : முஸ்லிம்*

செல்வம் என்பது அடுத்தவர்களின் கைகளிலிருந்து தான் ஒருவனின் கரங்களுக்கு வந்தது. ஆகவே அது அடுத்தவர்களுக்கே போய்ச்சேர வேண்டும் என்பதே நியதி. "சிக்கனமாக இரு; ஆனால் கஞ்சனாகி விடாதே!"

நம்மில் பெரும்பாலோர் யாருடனும் எந்தப் பிரச்சனையையும் வைத்துக் கொள்ளமாட்டார்கள். தான் உண்டு. தன் வேலையுண்டு என்று வம்பு வழக்கின்றி வாழ்க்கையை ஓட்டுவார்கள். நன்மையோ.... தீமையோ எதிலும் ஈடுபடாமல் வெறுமனே நேரத்தை கழிப்பார்கள். கேட்டால், சும்மா இருப்பதே சுகம்! என்று கூறுவார்கள். இவர்கள் சுகமாய் இருப்பதை நாம் ஒன்றும் தடுக்கவில்லை. இந்த உலகில் சுகமாய் இருந்து விட்டால் போதுமா? மறுமையின் நிரந்தர சுகம் வேண்டாமா? நிச்சயம் வேண்டும்! அதற்கு என்ன செய்வது? ஒன்றும் மலையை புரட்ட வேண்டாம். சும்மா இருக்கும் பொழுது,

**சுப்ஹானல்லாஹ்.... அல்ஹம்துலில்லாஹ் ...... அல்லாஹு அக்பர் மிகச்சிறிய திக்ர். 'லாயிலாஹ இல்லல்லாஹ்"** நாவிற்கு லேசானது. மீஸானில் கனமானது. அல்லாஹ் கூறுகிறான் :

> **"நீங்கள் வெற்றி பெறுவதற்காக, அல்லாஹ்வை அதிகமாக திக்ர் செய்யுங்கள்"**

*அல்குர்ஆன் 62:10*

**“இரண்டு சொற்கள் உள்ளன; அவை நாவின் மீது எளிதானவை; மீஸான் தராசில் கனமானவை; ரஹ்மானுக்கு பிரியமானவை அவை : 1. ஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி; 2. ஸுப்ஹானல்லாஹில் அளீம்**

*அறிவிப்பவர் : அபூஹுரைரா(ரழி), நூல்கள் : புகாரீ, முஸ்லிம்*

**“ஸுப்ஹானல்லாஹ், வல்ஹம்துலில்லாஹ், வலாஇலாஹ இல்லல்லாஹ் அல்லாஹு அக்பர்”** என்று நான் கூறுவது, சூரியன் எதன்மீது உதிக்கிறதோ அதனை (பூமி, பூமியிலுள்ள பொருள்களை) விட எனக்கு மிகப்பிரியமானதாகும் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர் : அபூஹுரைரா(ரழி), நூல் : முஸ்லிம்*

***அன்புச் சகோதரர்களே!***

சுமார் அறுபதிற்கும், எழுபதிற்கும் இடைப்பட்ட நம் குறுகிய வாழ்க்கையில் தூக்கம், உழைப்பு, மனைவி மக்கள், தாய், தந்தை, உற்றார், உறவினர் என ஒவ்வொருவருக்கும் பங்கு வைத்து கொடுத்தது போக மிஞ்சி நிற்பது சில மனித்துளிகள் மட்டுமே. இந்த குறுகிய நேரத்தில் நாம் எந்த நன்மை செய்தாலும் அதற்கு ஒன்றுக்கு 10 முதல் 700 மடங்கு நன்மையை அல்லாஹ் தருவதாக வாக்களித்துள்ளான்.

**“யார் நன்மையான செயலை நாடி அதனை செயல்படுத்துகிறாரோ அவருக்கு 10 முதல் 700 வரையிலும் அதற்கு மேலும் பன்மடங்கு நன்மைகளை எழுதுகிறான். யார் ஒரு தீமையான செயலை செய்ய நாடியும் அதனை செய்யவில்லையோ அவருக்கு அல்லாஹ் தன்னிடத்தில் ஒரு முழுமையான நன்மையை எழுதுகிறான். யார் தீமையான செயலைச் செய்ய நாடி அதனைச் செய்தும் விடுகிறாரோ அவருக்கு அல்லாஹ் ஒரு தீமையை மட்டும் எழுதுகிறான்”** என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ்(ரழி), நூல்கள் : புகாரீ, முஸ்லிம்*

எனவே சகோதரர்களே! சும்மா இருக்காதீர்கள் நேரம் ஓடிக்கொண்டிருக்கிறது. எந்த ஒரு சிறிய நன்மையையேனும் செய்யாமல் அந்த நேரத்தை விட்டு விடாதீர்கள்.

சவுதி, ரியாத்தில் உள்ள இமாம் முஹம்மது பின் சவூது பல்கலைக்கழகம் சமீபத்தில் ஓர் ஆய்வு நடத்தியது. **“உயர்நிலைப்பள்ளி மாணவ, மாணவிகள் எவ்வாறு தங்கள் ஓய்வு நேரத்தை செலவிடு கிறார்கள்”** என்பதே அந்த ஆய்வின் நோக்கம்.

**சுமார் 85 சதவீதம் மாணவ, மாணவிகளுக்கு தங்கள் ஓய்வு நேரத்தை எப்படி கழிப்பது என்று தெரியாமல் உள்ளனர். 70 சதவீதம் மாணவர்களுக்கு தினமும் 2 முதல் 7 மணி நேரம் ஓய்விருக்கும்**

**[illegible] 70 சதவீதம் மாணவர்களுக்கு தினமும் 2 முதல் 7 மணி நேரம் ஓய்விருந்தும் அந்த ஒய்வை நன்மையான முறையில் செலவிட வாய்ப்பு வழங்கப்படவில்லை. 82 சதவீதம் பேர்களுக்கு விளையாட்டுகளில் ஈடுபட ஆர்வம் இருந்தும் அதற்கு ஒரு வழியும் இல்லை. இறுதியில் சுமார் 48 சதவீதம் பேர் டி.வி. பார்ப்பதிலேயே தங்கள் பொழுதைக் கழிக்கிறார்கள். 52 சதவீதம் மாணவர்கள் ஏதாவது புத்தகம் 46 சதவீதம் மாணவர்கள் நேரத்தைப் போக்க கண்போன போக்கில் கார் ஓட்டுகிறார்களாம்.**

*ஆதாரம் :* ***Arab News, Sep. 12, 2004, P. 3***

**“பலம் வாய்ந்த முஸ்லிம் பலமற்ற முஸ்லிமைவிட அல்லாஹ்விடம் மிகப்பிரிய மானவன் சிறந்தவன்”** என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர் : அபூஹுரைரா(ரழி), நூல் : முஸ்லிம்*

உடல் பலத்தை பேணிக்காப்பதில் உடற் பயிற்சி விளையாட்டுகள் பெரும் பங்கு வகிக்கின்றன. அதற்கான வாய்ப்பை அரசும் கொடுப்பதில்லை. நமக்கும் ஆர்வமில்லை. விளையாட்டு என்றாலே கிரிக்கெட் தான். நாள் முழுவதும் பார்த்து நேரத்தை அல்ல முழு நாட்களையே வீணாக்குகின்றோம். விளையாட்டை டி.வி.யில் பார்த்துக் கொண்டிருந்தால் பலம் வருமா? உள்ள பலமும் போய் கண் கெட்டுப் போவது தான் மிச்சம்.

விளையாட்டிற்கு கூட முஸ்லிம்கள் லாயக்கில்லை என்பதை கடந்த 2004 ஏதன்ஸ் ஒலிம்பிக் உலகறியச் செய்தது. உலக மக்கள் தொகையில் 3ல் 1பங்கு முஸ்லிம்கள். முஸ்லிம் நாடுகள் மட்டும் 52 உள்ளன. ஆனால் வாங்கிய பதக்கங்கள் விரல் விட்டு எண்ணும் அளவு. எந்த ஒரு விளையாட்டிலும் முத்திரையை பதிக்கவில்லை. வந்தார்கள், ஆடினார்கள், ஓடினார்கள். இதுதான் இன்று முஸ்லிம் இளைஞர்கள் நிலை.

முஸ்லிம்கள் உடல் நலனை வளர்ப்பதில் காட்டாத அக்கறையும் ஆர்வமும், உடல் நலனை கெடுப்பதில் கூடுதல் கவனம் செலுத்தப்படுகிறது. இவர்கள் பணத்தை கொடுத்து வாங்கி புகையாய் கரியும் சிகரெட்களின் மதிப்பு பல கோடி டாலர்கள். எல்லாம் அமெரிக்காவிற்கும், பிரிட்டனுக்கு போகிறது. இளைஞர்களே! ஏன் சிகரெட் பிடிக்கிறீர்கள் என்று கேட்டால், **“ஹீ.. ஹீ... சும்மா டயம் பாஸுக்கு ....** அதாவது புகை விட்டு பொழுதை போக்குகிறார்களாம். அல்லாஹ்வின் அருட்கொடையான, செல்வம், உடல் ஆரோக்கியம், நேரம் மூன்றும் புகையாய் கரியாய் காற்றில் பறக்கிறது. சகோதரர்களே! அல்லாஹ்வுக்கு அஞ்சிக் கொள்ளுங்கள். நரக நெருப்பில் நீங்கள் கரிக்கட்டையாய் புகையாய் போய் விடுவீர்கள்! திருந்தி விடுங்கள்!

மனிதன் வெற்றி பெற வேண்டுமானால், ஈமான் கொள்ளவேண்டும்; நல்ல செயல்கள் செய்யவேண்டும். சத்தியத்தைக் கொண்டு உபதேசித்து பொறுமையைக் கொண்டும் ஒருவருக்கொருவர் உபதேசம் செய்யவேண்டும். இதுதான் மனிதன் வெற்றியடையும் வழி. ஆக இந்த வழியை காட்ட பல கூட்டங்கள் முஸ்லிம்களிடமிருந்து புறப்பட்டு விட்டார்கள். பெரும்பாலான முஸ்லிம்களை ஏமாற்றி ஷைத்தான் தன் மாய வலையில் மாட்டி நரகத்திற்கு இழுத்துச் செல்வது இங்குதான். ஆகவே அன்புச் சகோதரர்களே!

எது நல்ல செயல்? எது தீய செயல்? எது சத்தியம்? எது அசத்தியம்? போகும் பாதை அல்லாஹ்வின் பாதையா? ஷைத்தானியப் பாதையா? என்பதை நன்கு அறிந்து கொள்வது அவசியம். இதில் நீங்கள் ஏமாந்து விட்டால் அதோ கதிதான். உங்களை நரகிற்கு இழுக்க இதோ ஒரு கும்பல் வருகிறது!

அவ்லியாக்கள் மூலம் அல்லாஹ்வின் நேசத்தைப் பெறலாம். கபுரடிக்கு வா! சகோதரா! உன்னை கை தூக்கி கரையேற்றிவிட அப்பா இருக்கிறார் நாதாக்கள், சோதாக்கள் உனக்கு நல்வழி காட்டுவார்கள்!

நீ சொர்க்கம் போக வேண்டுமா? ஆண்டவர் கபுரடியில் மருந்திருக்கிறது. வா! யார் அந்த ஆண்டவர்?

**“மெய்ஞானப் பண்டிதர் ஷாஹுல் ஹமீதொலி**
**விற்கும் அருமருந்து**
**அது அஞ்ஞான அந்தக் காலத்தை - பிளக்கும்**
**அருளெனும் மாமருந்து**
**சமனுடனே எந்தக் காலமும் விற்றிடும்**
**காதிர் மீரா மருந்து - அது**
**ஜமாத்துல் ஆஹிர் மாதம் சகலரும்**
**தேடும் சஞ்சீவி மாமருந்து!”**

சகோதரா! நாகூரில் இருந்து நீ தப்பிவிட்டால் போதுமா அதோ ஏர்வாடி சாஹிபுமார்கள் உன்னை அழைக்க வருவதைப் பார்!

**“நல்லருள் தாருங்கள் நாதா - எங்கள்**
**சுல்த்தான் செய்யது இபுராஹீம் நீதா**
**நல்லருள் தாருங்கள் நாதா!**
**தர்ஹாமுன் வந்து நின்றேன் - என்னை**
**தயவாக ஆழ்வீர்கள் என்றே**
**ஏர்வாடிக்கு கென்றும் யான் வருவேன்-என்னை**
**என்றென்றும் பாரும் கண்ணாலே .....”**

இணைவைப்பு தான் இங்கு. இஸ்லாம், பித்அத் இங்கு சுன்னத் ஆக மாறும் தக்லீதே இங்கு தவ்ஹீது. சகோதரா! இதிலிருந்தும் நீ தப்பி விட்டால் போதுமா? அதோ ஒரு கூட்டம் உன்னை அல்லாஹ்வின்

பாதையில் அழைக்க வருவதை பார்! இவர்கள் பிடியில் நீ சிக்கி விட்டால், உன் தலையில் மேலும் ஒன்றிருக்காது. தலைக்கு உள்ளேயும் ஒன்றுமில்லாமல் ஆக்கி விடுவார்கள். சரி! என்ன சொல்கிறார்கள் என்று கேட்போம்! பிறகு படிப்போம் ஓட்டம்!!

**அஸ்ஸலாமு அலைக்கும்!**

பாய் தீனுடைய விஷயமாய் பேச ஜமாஅத் வந்திருக்கு; புறப்படுங்கள் அல்லாஹ்வின் பாதையில் **'நாற்பது நாள் சில்லா'** என்று உன் தலையில் குல்லாவை போட்டு டிரேட் மார்க்க ஜிப்பாவையும் மாட்டி விடுவார்கள். பிறகு ஊர் ஊராக அலைய வேண்டியது தான். இதற்கெல்லாம் குர்ஆன், ஹதீஸில் ஆதாரம் கேட்கக்கூடாது. எல்லா ஆதாரமும் டில்லி **'ஹஜ்ரத்ஜி'**யிடம் உள்ளது. இதுதான் இந்த ஜமாஅத்தின் இஸ்லாம்.

இந்த 6ம் நம்பர் இயக்கத்தை ஆரம்பித்தவர் மவ்லானா இல்யாஸ்(ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள் :

> **"ஈமானையும் அமலே ஸாலிஹானவையும் பற்றி பேசுவது இவ்வேலையின் (தப்லீக் ஜமாஅத்) அலீப்.... பே.... தான்"**

*ஆதாரம் : மல்பூஜாத், பக்கம் 40*

இவர் இப்படிச் சொல்லி 65 வருடங்கள் ஆகிவிட்டன. இன்னும் அதே அலீப்.... பே....யை ஒண்ணாங்கிளாஸ் டீச்சர் போல் வருடக் கணக்கில் ஒப்பித்துக் கொண்டு வருகிறார்கள். கியாமத் நாள் வரை இவர்கள் அலிப்... பே....யை விட்டுத் தாண்ட மாட்டார்கள். இது நிச்சயம்!

**அல்லாஹ் கூறுகிறான் :**

> **"சத்தியத்தை உபதேசித்து (அதனால் வரும் துன்பங்களைக் கண்டு) பொறுமையைக் கொண்டு உபதேசியுங்கள்".**

சத்தியத்தை மக்களுக்குச் சொல்லும் போது அதனால் பல துன்பங்களை சந்திக்க நேரிடும், கல்லடி, சொல்லடி எல்லாவற்றையும் எதிர் கொள்ள வேண்டும். அதில் பொறுமையை கடைப்பிடித்து தொடர்ந்து அழைப்புப் பணியை தொடர வேண்டும்.

எப்பொழுது கல்லடி விழும்? மக்கள் செய்யும் தீய செயல்களை தடுக்கும் போது தான். நபி(ஸல்) அவர்கள் ஃதாயிப் நகரில் கல்லடி பட்டு இரத்தம் சிந்தியது எதற்காக? **"சிலைகளை வணங்காதீர்கள். படைத்த அல்லாஹ்வை மட்டும் வணங்குங்கள்"** என்று சொன்னதால் தான். நபி(ஸல்) அவர்கள் காட்டித் தந்த இந்த வழிமுறை இந்த இயக்கத்தாருக்கு கஷ்டமாக உள்ளது. மவ்லானா இல்யாஸ் அவர்களின் சுன்னத் (வழிமுறை) தான் இவர்களுக்கு பாதுகாப்பானது எப்படி?

மக்கள் செய்யும் தீமைகளை ஏன் சொல்ல வேண்டும்? நன்மையை மட்டும் ஏவிக் கொண்டேயிருந்தால் தீமை ஓடி விடாதா? இருட்டில் டார்ச் லைட் அடித்தால் இருள் ஓடுவது போல் நன்மையை ஏவிக் கொண்டே இருந்தால் தீமைகள் ஓடி விடும். இந்த 6ம் நம்பர் இயக்கத்தின் தத்துவம் குர்ஆனுக்கு முரண்படுவதை அவர்கள் கண்டு கொள்ள மாட்டார்கள்.

**“நன்மையை ஏவி தீமையை தடுங்கள்”** என்று அல்லாஹ் கூறியுள்ளானே என்று கேட்டால், “எங்கள் மவ்லானா இல்யாஸ்(ரஹ்) அவர்கள் அப்படிச் சொல்லவில்லை. வேண்டும் என்றால் நீங்கள் அந்த வேலையைப் பாருங்கள். நாங்கள் இந்த வேலையைப் பார்க்கிறோம் என்று மழுப்பி நழுவி விடுவார்கள்.

ஏனென்றால் பள்ளி வாசலில் உள்ளே அமர்ந்து பாதுகாப்பாக பெரியார் புராணம் படிப்பதுதான் இவர்களது ஃதாவா பணி.

**அன்புச் சகோதரர்களே!**

மறுமையில் கேள்விக் கணக்கின் போது, **“நீ மூன்று சில்லா போனாயா? வருடச் சில்லாவை பூர்த்தியாக்கினாயா? மாதம் மூன்று தவறாது வக்து கொடுத்தாயா? பெரியார் புராண அமல்களின் சிறப்பு படித்தாயா? மத்ஹபை பின்பற்றினாயா? என்று நாம் கேட்டகப்படமாட்டோம்.**

மறுமையில் அல்லாஹ் எந்தக் கேள்விக்கு நம்மிடம் விடை கேட்பானோ? அந்தக் கேள்விக்குரிய பதிலை மட்டும் இங்கு தேடுங்கள். எந்தக் கேள்வியை அல்லாஹ் கேட்க மாட்டானோ அந்த கேட்காத கேள்விகளுக்குரிய பதிலைத் தேடி நேரத்தையும் பொருளையும், இளமையையும் வீணடிக்க வேண்டாம்.

> அல்லாஹ் கூறுகிறான் : **அவர்கள் இவ்வுலக வாழ்க்கையில் வழிகேடான முயற்சிகளை மேற்கொண்டு தாங்கள் உண்மையிலேயே அழகான காரியங்களைச் செய்வதாக எண்ணிக் கொள்கிறார்களே! அவர்கள் தாம் தம் செயல்களில் மிகப்பெரும் நஷ்டவாளிகள் ஆவார்கள்.**
> *அல்குர்ஆன் 18:103,104*
>
> நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் : **“உங்களிடையே இரண்டை விட்டுச் செல்கிறேன். அவற்றைப் பற்றிப் பிடித்திருக்கும் காலமெல்லாம், நீங்கள் வழி தவறவே மாட்டீர்கள் ஒன்று அல்லாஹ் வின் வேதம்; இரண்டு எனது வழிமுறை”.**
>
> **“எவர் எம்மால் ஏவப்படாத அமல்களை செய்கிறாரோ, அவை அல்லாஹ்விடத்தில் மறுக்கப்பட்டவையாகும்”.**

*அறிவிப்பவர் : மாலிக் இப்னு அனஸ்(ரழி), நூல் : முஅத்தா*

**அன்புச் சகோதரர்களே!**

தர்ஹா, தரீக்கா, தக்லீது, தஃப்லீக் போன்ற கூட்டத்தாரின் வலையில் சிக்கி விடாமல் தப்பி விட்டாலும், இனி ஒரு கூட்டத்தாரின் பிடியில் இருந்து தப்புவது மிகக்கடினம். ஏராளமான இளைஞர்கள் இவர்களிடம் மாட்டிக் கொண்டு கொத்தடிமை பக்தர்களாக மாறி விட்டார்கள். அல்லாஹ்வின் பாதையில் மக்களை அழைக்கும் மற்றவர்களை விட இவர்கள் அதிக ஆபத்தானவர்கள். ஏனெனில்

அவர்கள் அவ்லியாக்கள், நாதாக்கள், பெரியார்கள் வழிமுறையை காட்டித்தான் மக்களை அழைக்கிறார்கள். ஆகவே இவர்கள் பிடியில் இருந்து எளிதில் விடுபட முடியும். ஆனால் நாம் இறுதியில் கூறிய ஆபத்தானவர்கள் அழைப்பது எப்படி என்றால்? குர்ஆன், ஹதீஸ் பெயரைச் சொல்லி நாங்கள் தவ்ஹீத்வாதிகள். இது தவ்ஹீது இயக்கம் என்று சொல்லி அழைப்பதால் இதிலிருந்து தப்புவது கடினம்.

குர்ஆன், ஹதீஸ் என வாய்கிழிய கத்துவார்கள். ஆனால் இவர்கள் நடைமுறை வாழ்க்கையில் அதற்கு சம்பந்தம் இருக்காது. குர்ஆன், ஹதீஸிலிருந்து ஒவ்வொன்றுக்கும் ஆதாரம் காட்டுவார்கள். ஆனால் தங்கள் பிரிவினை இயக்கத்திற்கு ஆதாரம் தர மாட்டார்கள். பிறர் மீது அவதூறுகளை அள்ளி இறைப்பார்கள். அதற்கான ஆதாரங்களை கேட்டால் கண்டு கொள்ள மாட்டார்கள். ஹலால், ஹராமை ஊருக்கு உபதேசிப்பார்கள். ஆனால் இவர்கள் பிறர் பொருளை மோசடி செய்து, நம்பிக்கை துரோகத்தையே நடைமுறைப் படுத்துவார்கள். இந்த போலித் தவ்ஹீது இயக்க ஆலிம்களிடம் மிகக் கவனமாக இருக்கவேண்டும். 15 வருடங்களுக்கு முன்பு இவர்கள் வலையில் வீழ்ந்த இளைஞர்கள் இப்பொழுதுதான் சற்று விழிப்புணர்வு பெற்று சிந்திக் ஆரம்பித்துள்ளார்கள்.

**எனவே அன்புச் சகோதரர்களே!**

இது போன்ற எல்லா வழி கெட்ட இயக்கங்களிலும் சேர்ந்து உங்கள் நேரத்தையும், பொருளையும் வீணாக்கி விடாதீர்கள். அல்லாஹ்வும் அவனது தூதரும் சொன்ன வழிமுறையை அறிந்து சுயமாக சிந்தித்து செயல்படுங்கள். புது இயக்கங்கள் அனைத்தும் நம்மை நரகிற்கு அழைக்கும் ஷைத்தான்கள் என்பதை புரிந்து கொள்வோம். 1400 வருடங்களுக்கு முன்பு நபி(ஸல்) ஏற்படுத்திய பேரியக்கம் **“முஸ்லிம்களின் கூட்டமைப்பில்”** தான் உலகிலுள்ள எல்லா முஸ்லிம்களும் இருக்கின்றோம். ஆகவே தனி இயக்கங்கள் தேவையில்லை. உலகில் முஸ்லிம்களாக வாழ்ந்தவர்கள் யார்? முஜ்ரிம்களாக (குற்றவாளிகளாக) வாழ்ந்தவர்கள் யார்? என்பதை நாளை அல்லாஹ் மறுமையில் தீர்ப்பளிப்பான். அல்லாஹ்வின் உரிமையை நாம் கையில் எடுத்து முஸ்லிம்களை உலகில் பிரித்ததுக் காட்டுவது மாபெரும் குற்றம்.

நபி(ஸல்) அவர்கள் கூறிய ஒரு கூட்டம் மட்டுமே சுவனம் செல்லும் பிற 72 கூட்டங்கள் நரகில் தள்ளப்படும். அந்த ஒரு கூட்டம் நபி(ஸல்) அவர்களும் அவர்களது தோழர்களும் எப்படி வாழ்ந்தார்களோ, அதன் படி வாழ்பவர்கள் மட்டுமே. ஸஹாபாக்கள் மக்களை பிரிக்கவில்லை; தனிப்

பெயரிட்டு தனி இயக்கம் காணவில்லை. நபி(ஸல்) அவர்கள் சிறப்பித்த மூன்று தலைமுறைகளிலும் தனி இயக்கங்கள் இருந்ததில்லை. தவ்ஹீதை சொல்லி தனி இயக்கம் நடத்தவில்லை. ஆகவே பிரிவினை இயக்கவாதிகளை விட்டு வெளியேறுங்கள். போலித் தவ்ஹீத் ஆலிமை புறக்கணியுங்கள்.

அன்புச்சகோதரர்களே! நாம் புரிந்து கொள்ள வேண்டியது ஒன்றுதான். இந்த உலக வாழ்க்கை நிலையற்றதுதான். ஆனால் பயனற்றதல்ல. இந்த உலக வாழ்க்கையை நன்றாகப் பயன்படுத்தி மறுமை என்னும் மறு உலக வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும். மறுமையில் சுவனமானது நூறு படித்தரங்களைக் கொண்டது. அவரவர்கள் அமலுக்குத் தகுந்தவாறு பரிசுகள் வழங்கப்படும். உயர்ந்த பரிசை அடைய வேண்டுமானால், அதற்கான தகுதியையும் நாம் உயர்த்திக் கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு நிமிடத்தையும் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் விருப்பமான வழியில் செலவிட்டாலே போதும். இது மிகவும் எளிதான வழி. எப்படி? ஒவ்வொரு சொல்லையும் செயலையும் உள்ளச்சத்தோடு, அல்லாஹ் நம்மை பார்த்துக் கொண்டிருக்கிறான் என்ற எண்ணத்தில் செயல்பட்டால், எல்லா நேரங்களும் நமக்கு நன்மையைத் தரும் நல்ல நேரமாக மாறிவிடும்.

**இறைவா! இவ்வுலகிலும் எங்களுக்கு நல்லதைக் கொடுப்பாயாக! மறுமையிலும் நல்லதைக் கொடுப்பாயாக! நரகின் வேதனையை விட்டும் எங்களை பாதுகாப்பாயாக?**

**மார்ச் 2005 அந்நஜாத்**